பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(09.07.2022 முதல் 13.07.2022 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 054 (07) PJN/GKMS/2022 தேதி: 08.07.2022

### காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (05.07.2022 முதல் 07.07.2022 வரை) | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -13.07.2022 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **05/07** | **06/07** | **07/07** | | **நாள்-1 09/07** | **நாள்-2 10/07** | **நாள்-3 11/07** | **நாள்-4 12/07** | **நாள்-5 13/07** |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 3 | 0 | 0 | 0 | 3 |
| 37 | 36 | 34 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 34 | 34 | 34 | 34 | 34 |
| 27 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 27 | 27 | 27 | 27 |
| 5 | 4 | 5 | மேக மூட்டம் | 6 | 6 | 5 | 5 | 6 |
| 49-70 | 57-70 | 56-73 | ஈரப்பதம் (%) | 60-70 | 60-70 | 60-70 | 60-70 | 60-70 |
| 9 | 9 | 8 | காற்றின் வேகம் (கி.மீ) | 16 | 16 | 16 | 16 | 16 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு வட மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

## எதிர்பார்க்கப்படும் வானிலை (09.07.2022 முதல் 13.07.2022 வரை):

→ ஜுலை 09 மற்றும் 13 தேதிகளில் லேசான மழை பெய்யக்கூடும்.

→ ஜுலை 09 மற்றும் 10 தேதிகளில் இடியுடன் மின்னல் ஓரிரு இடங்களில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

- அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 27-34 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 60-70 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் மணிக்கு 16 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

- ஜுலை 14 லிருந்து 20 வரை மழை (2.0 மி.மீ) இயல்பிற்கு குறைவாகவும், அதிகபட்ச வெப்பநிலை (30.71 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (24.50 டி.செ) இயல்பாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுறை

- **நெற் பயிரின் நாற்றங்காலில்** களையைக் கட்டுப்படுத்த ஒரு சென்ட்க்கு ஒரு மி.லி. பிஸ்பிரிபாக் சோடியம் (Bispyripac sodium 10 SC) களைக்கொல்லியை விதைத்த 8 நாட்களுக்கு பிறகு பயன்படுத்தவும்.
- **நெற் பயிரின் நடவு வயலில்** களைகளைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு பிரிட்டிலாக்லோர் 50 EC (Pretilachlor) 600 மி.லி. அல்லது பைரசோஸல்ப்யூரான் ஈதைல் 10 WP (Pyrazosullfuron ethyl) 80 கிராம் **நடவு** நட்ட மூன்று நாட்களுக்கு தெளிக்கவும்.
- **நேரடி சேற்று விதைப்பு** நெல்லில், களை மேலாண்மைக்கு ஏக்கருக்கு ட்ரைஃ பாமோன் (Triafamone) + ஈத்தாக்சி சல்ஃப்யூரான் (Ethoxysulfuron) 90 கிராம் விதைத்த 12-15 நாட்களில் தெளிக்க வேண்டும்.

**குறுஞ்செய்தி: அடுத்த சில தினங்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை ஒத்திவைக்கலாம்.**

முதல்வர்